செய்தி வெளியீட்டு எண்.389 நாள்:16.7.2009

# செய்தி வெளியீடு

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நவீன உடற்பயிற்சிக்கூடம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பில் நவீன உடற்பயிற்சி கூடத்தினை இன்று (16.7.2009) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அக்கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பில் நவீன உடற்பயிற்சிக் கூடத்தினை அமைத்திட ஆணையிட்டார்.

அதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு “சி” பிளாக்கில் சுமார் 1350 சதுர அடி பரப்பளவில் நவீன உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுமார் 8 இலட்சம் செலவில் கட்டிடப் பணிகளும், மின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக சுமார் 8 இலட்சம் மதிப்பிலான உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கப்பட்டு இந்த நவீன உடற்பயிற்சிக் கூடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

நவீன உடற்பயிற்சிக் கூடத்தில் காலை 5.00 மணி முதல் 7.00 மணிவரையிலும், காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் சட்டமன்ற ஆண் உறுப்பினர்கள் உடற்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையிலும் சட்டமன்ற பெண் உறுப்பினர்கள் உடற்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நவீன உடற்பயிற்சிக் கூடத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து பயிற்சியாளர் ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

நவீன உடற்பயிற்சிக் கூடத்தினை திறந்து வைத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உடற்பயிற்சி உபகரணங்களைக் கொண்டு பயிற்சி மேற்கொண்டார்.

மேலும், 5.8.2009 முதல் 9.8.2009 வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உடல் ஊனமுற்றோருக்கான சர்வதேச தடகளப் போட்டியில் கலந்து கொள்ளும் தமிழகத்தைச் சேர்ந்த 7 ஊனமுற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தலா ரூபாய் 30 ஆயிரம் வீதம் விமான பயணக் கட்டணத் தொகையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், சட்டப்பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ், பள்ளி கல்வித்துறை செயலாளர் திரு.குற்றாலிங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் திரு. சத்யபிரத சாஹூ மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.